Australian Government
Services Australia

TAMIL

# Special Benefit மீள்-பரிசீலனைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

## Special Benefit -ஐப் பற்றி

இந்தக் கொடுப்பனவையும், சரியான தொகையையும் உங்களால் பெற இயலும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக உங்களுடைய Special Benefit -ஐ நாங்கள் மீள்-பரிசீலனை செய்வோம்.

சிறப்பு சலுகைக்குத் தகுதி பெற, நீங்கள்:

- அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக விசாவை வைத்திருப்பது, அல்லது ஆஸ்திரேலிய குடிமகனாகவோ அல்லது ஆஸ்திரேலிய குடியிருப்பாளராகவோ இருப்பது
- நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக பயணம் செய்யாவிட்டால் ஆஸ்திரேலியாவில்
- மற்றொரு வருமான ஆதரவு கொடுப்பனவைப் பெற முடியவில்லை
- உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆதரிக்க போதுமான அளவு சம்பாதிக்க முடியவில்லை.

## நீங்கள் செய்யவேண்டியது

Special Benefit மதிப்பாய்வு செய்யும் முறையை நாங்கள் மாற்றியுள்ளோம். இனிமேல் நீங்கள் ஒவ்வொரு 13 வாரங்களுக்கும் சிறப்புப் பலன் மதிப்பாய்வை முடிக்க வேண்டியதில்லை. உங்களிடமிருந்து ஏதேனும் தகவல் தேவைப்பட்டால் நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம். உங்கள் சூழ்நிலை மாறாத வரை நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

## உங்களுடைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டால்

உங்களுடைய Special Benefit கொடுப்பனவை குறைக்கவோ, அதிகரிக்கவோ கூடிய மாற்றம் ஒன்று உங்களுடைய சூழ்நிலையில் ஏற்பட்டிருந்தால், அதைத் தெரிவிக்க நீங்கள் எம்முடன் தொடர்புகொண்டால் மட்டும் போதும். ஏதாவதொரு மாற்றம் ஏற்படும் பொழுது அதை நீங்கள் எமக்கு 14 நாட்களுக்குள் கட்டாயம் தெரிவித்தாக வேண்டும். உங்களுடைய, அல்லது உங்களுடைய வாழ்க்கைத் துணைவருடைய பின் வரும் விபரங்களில ஏற்படும் மாற்றங்கள் எதுவும் இதில் உள்ளடங்கும்:

- பெயர்
- வாழ்க்கைத்துணைவர் யாரும் இனி உங்களுக்கு இல்லை என்றால், அல்லது புதிய வாழ்க்கைத்துணைவர் ஒருவர் உங்களுக்கு இருக்கிறார் என்றால்
- முகவரி

- நீங்கள் வசிக்கும் வீட்டினை நீங்கள் விற்கிறீர்கள் என்றால்
- வருமானம்
- வருமான வரி அறிவிப்பு ஒன்றை நீங்கள் செய்யவேண்டுமா அல்லது இல்லையா என்பது
- குழந்தை ஒன்றைப் பராமரிப்பதற்காக, அல்லது குழந்தையைப் பராமரிப்பதற்காக நீங்கள் பகிர்ந்துகொள்ளும் நேரம்
- நீங்கள் சுகவீனமுறிருந்தால், அல்லது காயமுற்றிருந்தால் மற்றும் உங்களுடைய வழமையான வேலை அல்லது படிப்பு அளவை உங்களால் செய்துமுடிக்க இயலாமலிருந்தால், மற்றும் மருத்துவச் சான்று ஒன்றை உங்களால் எமக்குக் கொடுக்க இயலும் என்றால்
- வேலை அல்லது படிப்பின் அளவு
- வீசா-வின் உபபிரிவு.

உங்களுடைய மற்றும் உங்களுடைய வாழ்க்கைத்துணைவரின் வருமான விபரங்களை மறுபார்வையிடுவதற்காக அங்கொருவர் இங்கொருவராகத் தெரிவு செய்யும் பொழுது உங்களை நாங்கள் தெரிவு செய்யக் கூடும். 'கொடுப்பனவுத் துல்லியத்-தன்மை' குறித்த மறுபார்வைகளை மேற்கொள்ளும் செயல்முறையில் இது ஒரு பகுதியாகும்.

## மேலதிகத் தகவல்களுக்கு

- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/specialbenefit** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.
- உங்களுடைய மொழியிலுள்ள தகவல்களை நீங்கள் வாசிக்கவும், செவிமடுத்துக் கேட்கவும், அல்லது காணவும் இயலுமான **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.
- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி எம்முடன் உங்கள் மொழியில் பேச **131 202** -ஐ அழையுங்கள்.
- Medicare-இற்காக **132 011** மற்றும் Child Support-இற்காக **131 272** -ஐ அழையுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையா என்பதை எமக்குத் தெரிவியுங்கள், ஒருவரை நாங்கள் இலவசமாக ஏற்பாடு செய்வோம்.
- சேவை மையம் ஒன்றிற்குச் செல்லுங்கள்.

குறிப்பு: ஆஸ்திரேலியாவில் எவ்வொரு இடத்திலிலும் இருக்கும் '13' இலக்கங்களுக்கு உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தப்பட்டதொரு வீதத்தில் கட்டணம் அறவிடப்படும். உள்ளூர் அழைப்பு ஒன்றிற்கு ஆகும் விலையிலிருந்து இந்த வீதம் மாறுபடலாம், அத்துடன் தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கு இடையேயும் இது வேறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத்

தொலைபேசிகள் மற்றும் கைப்பேசிகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு ஆகும் நேரம் கணக்கிடப்பட்டு அதியுயர் வீதக் கட்டணங்கள் அறவிடப்படலாம்.

## பொறுப்புத்துறப்பு

இந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவல்களானவை கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கானதொரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவு ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா என்பதை முடிவு செய்வதும், உங்களுடைய குறிப்பிட்ட சூழல்களுக்கேற்ற விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான முடிவினை மேற்கொள்வதும் உங்களுடைய பொறுப்பாகும்.

# Changes to Special Benefit reviews

## About Special Benefit

We review your Special Benefit to make sure you can still get the payment and the right amount.

To be eligible for Special Benefit, you must be:

- holding an approved temporary visa, or be an Australian citizen or Australian resident
- in Australia unless you are travelling for an approved reason
- unable to get another income support payment
- unable to earn enough to support you and your family.

## What you need to do

We have changed the way we review Special Benefit. You no longer need to complete a Special Benefit review every 13 weeks. We will let you know if we need any information from you. You do not need to do anything unless your situation changes.

## If your situation changes

You only need to contact us if there is a change in your situation that could reduce, increase or stop your Special Benefit payment. You must tell us within 14 days when something changes. This includes if any of these details change for you or your partner:

- name
- if you no longer have a partner or you have a new partner
- address
- you sell the home that you live in
- income
- whether or not you have to lodge a tax return
- the amount of time you care or share the care for a child
- you are sick or injured and cannot do your usual work or study load, and can give us a medical certificate
- work or study load
- visa subclass.

We may also choose you at random to review your and your partner's payment details. This is part of our Payment Accuracy reviews.

## For more information

- Go to **servicesaustralia.gov.au/specialbenefit** for more information in English.
- Go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language.
- Call **131 202** to speak with us in your language about Centrelink payments and services.

- Call **132 011** for Medicare and **131 272** for Child Support. Let us know if you need an interpreter, and we will arrange one for free.
- Visit a service centre.

Note: calls from your home phone to ‘13’ numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to ‘1800’ numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It’s your responsibility to decide if you wish to apply for a payment and to make an application with regard to your particular circumstances.